# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No. I, PUDUKKOTTAI.

**CC. No. 182/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition Witness | அ.சா. 1 | Calling | வீட்டுக்குடித்தனம் |
| Witness Name | திருமதி. மீனாட்சி | Religion | |
| Husband Name | கருப்பையா | Age | 44 |
| Village | சமத்துவபுரம் | | |
| Taluk | திருமயம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.03.2025.

**( எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் சமத்துவபுரத்தில் குடியிருந்து வீட்டுக்குடித்தனம் நடத்தி வருகிறேன். கடந்த 19.07.2023 அன்று மதியம் 11.30 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது என் மகனுக்கு விபத்து நடந்துள்ளதாக எனக்கு ஒரு நபர் போன் மூலம் தகவல் தெரிவித்தார். நான் PMCHக்கு சென்று பார்த்தேன்.

2. சம்பவ இடத்திலேயே எனது மகன் ராஜேஸ் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் என்னிடம் சொன்னார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் வாக்குமூலம்நான் கொடுத்தது தான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** ரைஸ் மில் அருகே லாரி மோதி என் மகனுக்கு விபத்து நடந்ததாக என்னிடம் கூறினார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** –

3. சம்பவ இடம் திருமயம் – மதுரை மெயின் ரோடு என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் இருபுறமும் கடைகள் மற்றும் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். மக்கள் நடமாட்டம் அதிகமான பகுதி என்றால் சரிதான். அந்த சாலையின் வழியாக இரு சக்கர வாகனம், லாரி, கார், பேருந்து போன்ற வாகனங்கள் சென்று வரும் என்றால் சரிதான்.

4. எனது மகன் வீட்டை விட்டு சென்ற நேரம் காலை 10.30 மணி இருக்கும். சினிமாவிற்கு செல்வதாக கூறி எனது மகன் வீட்டை விட்டு சென்றார். தியேட்டர் பற்றிய விவரம் எனக்கு தெரியாது. புதுக்கோட்டையில் உள்ள தியேட்டருக்கு செல்வதாக என்னிடம் கூறி சென்றார்.

5. எனக்கு மதியம் 12.00 மணியளவில் போன் வந்தது. எனது மகனுக்கு விபத்து ஏற்பட்டு இறந்துவிட்டதாக தகவல் தெரிவித்தனர். தியேட்டரில் காலை 10.00 மணிக்கு

காட்சிகள் ஒளிபரப்பப்படும் என்றால் சரிதான். எனக்கு தகவல் கிடைத்து அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அப்போது நேரம் மதியம் 02.00 மணி இருக்கும்.

6. எனது வீட்டிற்கும், சம்பவ இடத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 20,25 கி.மீ தூரம் இருக்கலாம். என் மகனை மருத்துவமனையில் யார் சேர்த்தது என்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். அவரது பெயர் லியோ ஆகும். லியோ என்பவர் எனது உறவினர் அல்ல, எங்கள் ஊரைச் சேர்ந்தவர்.

7. எனது மகன் ஓட்டி சென்ற வாகனத்தின் பதிவெண், மோதியதாக சொல்லப்படும் வாகனத்தின் பதிவெண் விவரம் எனக்கு தெரியாது என்றால் நான் சம்பவ இடத்தில் இல்லை. எனக்கு தெரியாது. நான் கொடுத்த புகாரில் எந்த வாகனம் மோதியது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் இல்லை.

8. விபத்து சம்பந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்தை நேரில் பார்த்தவர்களின் விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவத்தை பற்றி போலீசார் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். புகாரில் என்ன விவரம் எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

9. எனக்கு படிப்பறிவு இல்லை. போலீசார் எழுதி வைத்திருந்த தாளில் கையொப்பம் வாங்கி கொண்டார்கள் என்றால் சரிதான். 19.07.2023 ஆம் தேதி போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டார்கள். நேரம் எனக்கு தெரியாது. இழப்பீடு பெறுவதற்கு மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

10. சினிமாவிற்கு செல்வதற்கு நேரமாகிவிட்டதால் எனது மகன் இரு சக்கர வாகனத்தை அதிவேகமாக இயக்கி, வாகனத்தை முந்தி சென்று தனக்கு தானே விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. இழப்பீடு பெறுவதற்காக பொய்யான புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சாட்சிகள் விஜய், ரஞ்சித், அடைக்கப்பன், சுப்பிரமணியன் ,கணபதி, ராஜ்குமார் ஆகியோர்கள் எனது உறவினர்கள் என்றால் சரிதான்.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் எதிரி முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/– சி.பாரதி)
நீதித்துறை நடுவர் எண் –1 ,
புதுக்கோட்டை.